# இன்று பொதுக்காலம் முப்பத்திமூன்றாம் ஞாயிறு

மூன்றாவது திருவழிபாடு ஆண்டு

**இன்றைய வாசகங்கள்:**

இறைவாக்கினர் மலாக்கி நூலிலிருந்து வாசகம் 4: 1-2,

திருப்பாடல் 98: 5-6. 7-8. 9,

திருத்தூதர் பவுல் தெசலோனிக்கருக்கு எழுதிய

இரண்டாம் திருமுகத்திலிருந்து வாசகம் 3: 7-12

லூக்கா எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 21: 5-19

## திருப்பலி முன்னுரை:

இறை இயேசுவின் அன்புக்கும் அரவணைப்புக்கும் உரிய அன்பு மக்களே தமது நிறையன்பால் நம்மை வழிநடாத்திக்கொண்டிருக்கும் நம் விண்ணகத் தந்தையின் திருப்பெயரால் நல்வாழ்த்துக்கள் கூறி இத்திருப்பலிக் கொண்டாட்டத்திற்கு உங்களை அன்போடு வரவேற்கின்றோம். இன்று பொதுக்காலம் முப்பத்திமூன்றாம் ஞாயிறு தினத் திருப்பலியைக் கொண்டாடுகின்றோம்.

ஆண்டவர் உலகுக்கு நீதி வழங்க வருகின்றார் என்றும்: அவர் பூவுலகை நீதியுடன் ஆண்டிடுவார் என்றும்: மக்களினங்களை நேர்மையுடன் ஆட்சி செய்வார் என்றும் இறைவார்த்தைகள் வழியாக நமக்குக் கூறப்படுவதோடு, நம்மைத் தலைநிமிர்ந்து நிற்கும்படியும் ஏனெனில் நமது மீட்பு நெருங்கி வருகின்றது என்னும் எச்சரிக்கையும் விடுக்கப்படுகின்றது. நாம் வாழ்வு பெற ஆண்டவர் நமக்கு வழங்கும் இந்த நல்ல செய்திக்காகவும், தீமையிலிருந்து நம்மைக் காக்கக் கொண்டிருக்கும் கரிசனைக்காகவும் இவ்வேளையில் அவருக்கு நன்றி சொல்லுவோம். ஆண்டவர் முன்னிலையில் மகிழ்ந்து பாடுவோம். ஆண்டவரைப் புகழ்தேத்துவோம், அவரை வாழ்த்திப் பாடுவோம்.

“இதோ! சூளையைப்போல் எரியும் அந்த நாள் வருகின்றது. அப்போது ஆணவக்காரர், கொடுமை செய்வோர் அனைவரும் அதனுள் போடப்பட்ட சருகாவர். வரப்போகும் அந்த நாள் அவர்களுடைய வேரையோ,கிளையையோ விட்டுவைக்காது. முற்றிலும் சுட்டெரித்து விடும்” என்னும் இறைவார்த்தைகள் மிகவும் ஆணித்தரமான ஒரு செய்தியை நம்முன்னே விட்டுச் செல்லுகின்றது. இறைமக்களாகிய நாம், உண்மை, நீதி, அன்பு, உறவு, பிறர் நலம் போன்றவற்றில் அதிக ஆர்வம் கொண்டவர்களாக, தற்பெருமையை விடுத்து இறை நம்பிக்கையோடு வாழ அருள் வரம் கேட்டுத் தொடரும் பலியில் பங்கேற்போம்.

விசுவாசிகள் மன்றாட்டுகள்:

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.

**பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.**

**1. நேர்மையுடன் ஆட்சி செய்யும் தந்தையே இறைவா!**

எம் திருத்தந்தை, ஆயர்கள்,குருக்கள், துறவிகள், நல்லாயனுக்குரிய ஞானத்தோடும், விவேகத்தோடும் மக்களை வழிநடாத்தவும், இக்கட்டான வேளைகளில் மனந்தளராது பணியாற்றவும் வேண்டிய அருள் வரங்களை அவர்கள் மேல் பொழிந்து அவர்களை வழிநடாத்திடவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**2. எம் வேண்டுதலை உற்றுக் கேட்கும் தந்தையே இறைவா!**

எம் பங்கை வழிநடத்தி இறந்த பங்கு குருக்களுக்காவும், பங்குமக்களுக்காகவும் மன்றாடுகிறோம். உயிரோடு இருக்கும்போது என்னிடம் நம்பிக்கை கொள்ளும் எவரும் என்றுமே சாகமாட்டார் என்பதிற்கினங்க உம்மீது நம்பிக்கை கொண்டு வாழ்ந்து இறந்த ஆன்மாக்கள் அனைத்தும் தங்களுடைய பாவங்களினால் உத்தரிக்கிற ஸ்தலத்தில் இருந்தாலும் அவர்களை நிறைவாக ஆசிர்வதித்து உம் வானக வீட்டில் சேர்த்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**3. அன்பின் இறைவா,**

யாரும் நினையாத ஆன்மாக்களுக்காக சிறப்பாக மன்றாடுகிறோம். அவர்கள் தாங்கள் செய்த பாவங்களினால் உத்தரிக்கிற ஸ்தலத்தில் இருந்தாலும் அவர்கள் வேதனை குறைந்து உம் தெய்வீக விருந்தில் பங்குபெற அவர்களை ஆசிர்வதித்து உம்மிடம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**4. நிறைவாழ்வு தரும் ஊற்றான இயேசுவே, உம்மைப் போற்றுகிறேன்.**

வியத்தகு செயல்களை வான்வெளியிலும், இயற்கையிலும் காணும நாங்கள், உம்மை வியப்புக்குரியவர் எனப்போற்றுகிறோம். அருங்குறிகளைத் தேடி ஓடாமல், ஏமாறாதபடி விழிப்பாயிருக்கும் அருளை எங்களுக்குத் தந்தருளும். உமது தூய ஆவியால் எங்களை நிரப்பவும், இவ் உலகில் அடிக்கடி ஏற்படும் அழிவுகள், அச்சமூட்டும் நிகழ்வகளைக்கண்டு நிலைகுலைந்து போகாது உமது வார்த்தையில் நம்பிக்கை கொண்டு வாழ்வதற்கு வேண்டிய ஆற்றலை எமக்குத் தந்தருள வேண்டு மென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**5. அன்புத் தந்தையே இறைவா!**

எம் இளைஞர்களுக்காக உம்மை மன்றாடுகின்றோம். இவர்கள் கடவுளின் பிள்ளைகளாய் நற்செயல் அனைத்தையும் செய்யத் தகுதிபெறவும்,ஞானத்தோடு அனைத்தையும் செய்து முடிக்கவும், தீமைகளிலிருந்து விலகி உம்முடைய சாட்சிகளாய் அவர்கள் வாழ அவாகளை ஆசீர்வதித்து வழிப்படுத்தியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.